**I ADDL. DISTRICT MOTOR ACCIDENT CLAIMS TRIBUNAL, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**MCOP.NO.699/2019**

**NAME** : சிவராமகிருஷ்ணன்

**FATHER NAME** :

**VILLAGE** :

**TALUK** :

**CALLING** :

**RELIGION** :

**AGE** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 20.04.2023.**

குறுக்கு விசாரணை

அக்கவுண்ட் மேனேஜராக இந்தியா பைலிங்ஸ்சில் வேலை பார்க்கிறேன். என்னுடைய பதவி என்ன என்றால் கம்ப்ளையன்ஸ். மாதச் சம்பளம் ரூ.15,000ம் வாங்குகிறேன். 2019ல் விபத்து நடந்தது. நான் ஓட்டிச் சென்ற வண்டி நெம்பர் ஞாபகம் இல்லை. காம்ப்பன்சேஷன் கோரி வழக்கு போட்டுள்ளேன். என் மீது மோதிய வண்டி ஆட்டோ. அதன் நெம்பர் ஞாபகம் இல்லை. புகார் என் அப்பா கொடுத்தார். நான் மருத்துவமனையில் இருந்தேன். விபத்து சமயத்தில் நான் எம்.எஸ்.சி., பயோடெக்னாலஜி படித்தேன். எனக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளது. அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை, அது என்னிடம் உள்ளது. நான் இரு சக்கர வாகனத்தில்தான் தற்போது நீதிமன்றத்திற்கு வந்தேன். லீவு போட்டுவிட்டு வந்தேன். விபத்து சேவூர் பஸ் நிலையத்தை கிராஸ் செய்யும்போது நடந்தது. முதலாவது விஐடிக்குள்ளேயே உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். அதன்பிறகு ஆம்புலன்சில் சிஎம்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டேன். விபத்து நான் அதிவேகமாக ஓட்டியதாலும், என் அஜாக்கிரதையாலும் நடந்தது என்றால் சரியல்ல. ஆட்டோ டிரைவர் சரியாக வந்தார் என்றால் சரியல்ல. அவர் சிக்னல் போடாமல் வந்தார். விபத்து சமயத்தில் எனக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை என்றாலும் இருந்திருந்தால் அதை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் என் அஜாக்கிரதையால்தான் விபத்தே நடந்தது என்றால் சரியல்ல. விபத்தில் எனக்கு சொற்ப காயம் ஏற்பட்டது என்றாலும் அதிலிருந்து நான் என்னுடைய வேலையை செய்துதான் வருகிறேன் என்றாலும் எனக்கு எந்த இழப்பீடும் அதனால் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. உண்மையிலேயே ஊனம் ஏற்பட்டிருந்தால் நான் மெடிக்கல் போர்டுக்கு சென்று சான்று வாங்கி தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. எனக்கு இழப்பீடு வாங்க எந்த தகுதியில்லை என்பதால் மனு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.